


# LORDS TODAY

LORDS TODAY - International Social Media & Magazine
LORDS TODAY RNI Ref. No. 1287921 Title Code : TNBL04354 | Issue : October 2022
WhatsApp : 91-98405 59673 Editor | Publisher & Owner : Ld Dr. M. PAULRAJ
Free for - LORDS | LIONS | ROTARY & All International Social Service CLUBS

LORDS CLUBS INTERNATIONAL
சர்வதேச மனிதக் கடவுள்கள் சங்கங்கள்

Ld Dr. மபால்ராஜ்
Founder | International President

LORDS CLUBS INTERNATIONAL
Govt. Registration Number : 1359 / 2013
International Social Services

இரத்த தானம் செய்வோம்! உயிர் காப்போம்!!

மரம் நடுவோம்! மழை பெறுவோம்!! நிலம் காப்போம்!!!

அன்ன தானம் செய்வோம்! அருள் பெறுவோம்!!

கண் தானம் செய்வோம்! ஒளி கொடுப்போம்!!

கல்வி தானம் செய்வோம்! கல்வி கண் திறப்போம்!!


இந்திய பொருளாதாரம் உயர்த்திடுவோம்! இந்தியர்களை காத்திடுவோம்!!

Ph : 9840559673, 9790855633 Web : www.lordsclubs.com

www.lordsclubs.com



# திருக்குறள்



**4. அறன் வலியுறுத்தல்**

**குறள் 31 : சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு**

**உரை : அறம் சிறப்பையும் அளிக்கும்: செல்வத்தையும் அளிக்கும்: ஆகையால் உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையானது வேறு யஸது?**

**குறள் 32 : அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு**

**உரை : ஒரு வருடைய வாழ்கைக்கு அறத்தை விட நன்மையானதும் இல்லை: அறத்தை போற்றாமல் மறப்பதை விடக்கொடியதும் இல்லை.**

**குறள் 33 : ஒல்லும் வகையான அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாஞ் செயல்**

**உரை : செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம் அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.**

**குறள் 34 : மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுல நீர பிற**

**உரை : ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவானாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே: மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.**

**குறள் 35 : அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்ற தறம்**

**உரை : பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடித்து ஒழுகுவதே அறமாகும்.**

**குறள் 36 : அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்கால் பொன்றாத் துணை**

**உரை : இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்து கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியா துணையாகும்.**

**குறள் 37 : அறத்தா றிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தான் இடை**

**உரை : பல்லக்கை சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறத்தின் பயன் இஃது என்று கூறவேண்டா.**

**குறள் 38 : வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன் வாழ்நாள் வழியடைக்கும் கல்**

**உரை : ஒருவன் அறம் செய்ய தவறிய நாள் ஏற்படாதவாறு அறத்தை செய்வானானால் அதுவே அவன் உடலோடு வாழும் நாள் வரும் பிறவி வழியை அடைக்கும் கல்லாகும்.**

**குறள் 39 : அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம் புறத்த புகழும் இல**

**உரை : அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.**

**குறள் 40 : செயற்பால தோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும் பழி**

**உரை : ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே. செய்யாமல் காத்து கொள்ளத்தக்கது பழியே.**

தொடரும்.....

# BIBLE

## மெகா தொடர்

**PART-21**




## தொடக்கநூல் அதிகாரம் 45 திருவிவிலியம்

### யோசேப்பு தம்மைத் தெரியப்படுத்துதல்

1 அப்பொழுது யோசேப்பு தம் பணியாளர் அனைவர் முன்னிலையிலும் இதற்குமேல் தம்மை அடக்கிக் கொள்ள முடியாமல், எல்லோரும் என்னைவிட்டு வெளியே போங்கள் என்று உரத்த குரலில் சொன்னார். யோசேப்பு தம் சகோதரருக்குத் தம்மைத் தெரியப்படுத்தும் பொழுது வேற்று மனிதர் எவரும் அவரோடு இல்லை.

2 உடனே அவர் கூக்குரலிட்டு அழுதார். எகிப்தியர் அதைக் கேட்டனர். பார்வோன் வீட்டாரும் அதைப்பற்றிக் கேள்விப்பட்டனர்.

3 பின்பு, அவர் தம் சகோதரர்களை நோக்கி, நான் தான் யோசேப்பு! என் தந்தை இன்னும் உயிரோடிருக்கிறாரா? என்று கேட்டார். ஆனால், அவரைப் பார்த்து அவர் சகோதரர்கள் திகிலடைந்ததால், அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

4 ஆனால், யோசேப்பு தம் சகோதரர்களை நோக்கி, என் அருகில் வாருங்கள் என்றார். அவர்கள் அருகில் வந்தவுடன் அவர், நீங்கள் எகிப்திற்குச் செல்லுமாறு விற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான்தான்!

5 நான் இங்குச் செல்லுமாறு நீங்கள் என்னை விற்றுவிட்டது குறித்து மனம் கலங்க வேண்டாம். உங்கள்மீதே சினம் கொள்ள வேண்டாம். ஏனெனில், உயிர்களைக் காக்கும்பொருட்டே கடவுள் உங்களுக்கு முன்னே என்னை எகிப்திற்கு அனுப்பியருளினார்.

6 நாட்டில் பஞ்சம் தொடங்கி இரண்டு ஆண்டுகளே ஆகியுள்ளன. இன்னும் ஐந்தாண்டுகள் உழவோ அறுவடையோ இராது.

7 ஆதலால், உலகில் உங்களுள் எஞ்சி இருப்போரைப் பாதுகாக்கவும், பெரும் மீட்புச் செயலால் உங்கள் உயிர்களைக் காக்கவும், கடவுள் உங்களுக்குமுன் என்னை அனுப்பி வைத்தார்.

8 என்னை இங்கு அனுப்பியது நீங்கள் அல்ல, கடவுள்தாம். அவரே என்னைப் பார்வோனுக்குத் தந்தையாகவும், அவர் வீடு முழுவதற்கும் தலைவராகவும், எகிப்து முழுவதற்கும் ஆளுநராகவும் ஏற்படுத்தியுள்ளார்.

9 நீங்கள் என் தந்தையிடம் விரைந்து சென்று அவருக்குச் சொல்லுங்கள். உங்கள் மகன் யோசேப்பு தெரிவிப்பது இதுவே; கடவுள் என்னை எகிப்து முழுவதற்கும் ஆளுநராக நியமித்துள்ளார். எனவே, காலந்தாழ்த்தாமல் என்னிடம் வாருங்கள்.

10 நீங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் உங்கள் ஆடு மாடுகளோடும் உங்களுக்குச் சொந்தமான யாவற்றோடும் கோசேன் பகுதியில் எனக்கு அருகில் குடியேறி வாழலாம்.

11 அங்குள்ள உங்களை நான் பேணிக் காப்பேன். ஏனெனில், இன்னும் ஐந்தாண்டுகள் பஞ்சம் இருக்கும். இங்கு வராவிடில், நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் உங்களுக்குள்ள அனைத்தும் வறியோராய் வாடுவீர்கள் .

12 இதோ உங்களோடு பேசுவது என் வாய்தான் என்பதை நீங்களும் என் சகோதரன் பென்யமினும் கண்ணாரக் காண்கிறீர்கள்.

13 நான் எகிப்தில் அடைந்துள்ள சிறப்பு அனைத்தையும் நீங்கள் இங்குக் கண்ட யாவற்றையும் என் தந்தைக்குத் தெரிவியுங்கள். விரைந்துபோய், என் தந்தையை இங்கே அழைத்து வாருங்கள் என்று கூறினார்.

14 பிறகு, தம் சகோதரன் பென்யமினை அரவணைத்து அவன் தோளில் தலைசாய்த்துக்கொண்டு அழுதார். பென்யமினும் அப்படியே அவர் தோளில் தலைசாய்த்துக்கொண்டு அழுதான்.

# BIBLE




15 பின் யோசேப்பு தம் சகோதரர் யாவரையும் முத்தமிட்டு அழுதார். இதன்பின் அவர்கள் அவரோடு உரையாடினர்.

16 யோசேப்பின் சகோதரர்கள் வந்துள்ளனர் என்ற செய்தி பார்வோனின் அரண்மனையை எட்டவே, பார்வோனும் அவன் அலுவலர்களும் அகமகிழ்ந்தனர்.

17 அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கிக் கூறியது: நீர் உம் சகோதரர்களுக்கு இவ்வாறு சொல்வீர்; நீங்கள் செய்ய வேண்டியது யாதெனில், உங்கள் கால்நடைகளின் மேல் பொதியேற்றிக் கானான் நாட்டிற்குத் திரும்பிச் சென்று,

18 அங்கிருந்து உங்கள் தந்தையையும் குடும்பங்களையும் அழைத்துக் கொண்டு என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு எகிப்து நாட்டின் சிறந்த பகுதியைத் தருவேன். நீங்களும் நிலத்தின் வளமையை அனுபவிக்கலாம்.

19 உம் சகோதரர்களுக்கு நீர் மீண்டும் சொல்ல வேண்டியது; நீங்கள் இவ்வாறு செய்யுங்கள். உங்கள் குழந்தைகளையும் மனைவியரையும் அழைத்து வருமாறு, எகிப்து நாட்டினின்று வண்டிகளைக் கொண்டு போங்கள். உங்கள் தந்தையையும் அழைத்துக்கொண்டு வந்து சேருங்கள்.

20 உங்கள் தட்டுமுட்டுகளைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்; ஏனெனில், எகிப்து நாட்டில் சிறந்தவையெல்லாம் உங்களுக்கே உரியவையாகும்.

21 இஸ்ரயேலின் புதல்வர்கள் அவ்வாறே செய்தனர். பார்வோன் கட்டளையின்படி யோசேப்பு அவர்களுக்கு வண்டிகளையும் வழிக்கு உணவுப் பண்டங்களையும் கொடுத்தார்.

22 மேலும், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் வேறு புத்தாடைகளும் கொடுத்தார். பென்யமினுக்கோ முந்நூறு வெள்ளிக் காசுகளும் ஐந்து ஆடைகளும் கொடுத்தார்.

23 அப்படியே தம் தந்தைக்குப் பத்து ஆண் கழுதைகளின் மேல் எகிப்தின் சிறந்த பொருள்களையும், அவரது பயணத்திற்குப் பத்துப் பெண் கழுதைகளின் மேல் தானியத்தையும், அப்பம் முதலிய உணவு வகைகளையும் ஏற்றி அவர்களோடு அனுப்பி வைத்தார்.

24 பின்பு, அவர் தம் சகோதரர்களை வழியனுப்பி வைத்தார். அவர்களை விட்டுப் பிரியும்போது, நீங்கள் வழியில் சச்சரவு செய்யாதீர்கள் என்று சொல்லி அனுப்பினார்.

25 அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டுக் கானான் நாட்டிலிருந்த தங்கள் தந்தை யாக்கோபிடம் வந்து சேர்ந்தனர்.

26 அவர்கள் அவரிடம், யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறார்; அவரே எகிப்து நாடு முழுவதற்கும் ஆளுநர் என்று அறிவித்தனர். அதைக் கேட்டு யாக்கோபு மன அதிர்ச்சியுற்று அவர்கள் சொன்னதை நம்பவில்லை.

27 ஆனால், யோசேப்பு அவர்களுக்குச் சொன்ன யாவற்றையும் அவருக்கு அவர்கள் சொன்னதைக் கேட்டும், யோசேப்பு அவரை அழைத்து வர அனுப்பியிருந்த வண்டிகளைக் கண்டும் அவர்கள் தந்தை யாக்கோபு புத்துயிர் பெற்றவர் ஆனார்.

28 இறுதியில் இஸ்ரயேல், என் மகன் யோசேப்பு இன்னும் உயிரோடிருப்பது ஒன்றே போதும். நான் இறக்குமுன் சென்று அவனைக் காண்பேன் என்றார்.

## தொடக்கநூல் அதிகாரம் 46 திருவிவிலியம்

### யாக்கோபு தம் குடும்பத்துடன் எகிப்து செல்லல்

1 பின்பு, இஸ்ரயேல் தமக்கிருந்த யாவற்றையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டு, பெயேர்செபாவைச் சென்றடைந்தார். அவ்விடத்தில் தம் தந்தை ஈசாக்கின் கடவுளுக்குப் பலிகளை ஒப்புக்கொடுத்தார்.

# BIBLE




2 அன்றிரவு கடவுள் இஸ்ரயேலுக்குக் காட்சி அளித்து, யாக்கோபு! யாக்கோபு! என்று அழைத்தார். அவர், இதோ அடியேன் என்றார்.

3 கடவுள், உன் தந்தையின் கடவுளான இறைவன் நானே, எகிப்திற்குச் செல்ல நீ அஞ்ச வேண்டாம். அங்கே உன்னைப் பெரிய இனமாக வளரச் செய்வேன்.

4 நானும் உன்னோடு எகிப்திற்கு வருவேன். உன்னை நான் அங்கிருந்து மீண்டும் அழைத்து வருவேன். யோசேப்பு தன் கையாலே உன் கண்களை மூடுவான் என்றார்.

5 யாக்கோபு பெயேர்செபாவை விட்டுப் புறப்பட்டார். இஸ்ரயேலின் புதல்வர்கள் தம் தந்தையாகிய யாக்கோபையும் தங்கள் பிள்ளைகளையும் மனைவியரையும் அவருக்குப் பார்வோன் அனுப்பியிருந்த வண்டிகளில் ஏற்றிக் கொண்டனர்.

6 கானான் நாட்டில் அவர்கள் சேர்த்திருந்த ஆடு மாடுகளையும் சொத்துகளையும் சேகரித்துக் கொண்டனர். இவ்வாறு, யாக்கோபு தம் வழிமரபினர் அனைவரோடும் எகிப்திற்குப் போனார்.

7 தம் புதல்வரையும் அவர்கள் புதல்வரையும் தம் புதல்வியரையும் புதல்வரின் புதல்வியரையும் தம் வழிமரபினர் அனைவரையும் அவர் தம்மோடு எகிப்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார்.

8 எகிப்திற்கு வந்துசேர்ந்த யாக்கோபும் அவர் புதல்வர்களுமாகிய இஸ்ரயேலரின் பெயர்கள் பின்வருமாறு; யாக்கோபின் தலைமகன் ரூபன்.

9 ரூபனின் புதல்வர்கள்; அனோக்கு, பல்லூ, எட்சரோன், கர்மி.

10 சிமியோனின் புதல்வர்; எமுவேல், யாமின், ஒகாது, யாக்கின், சோவார், கானானியப் பெண்ணின் மகன் சாவூல்.

11 லேவியின் புதல்வர்; கெர்சோன், கோகாத்து, மெராரி.

12 யூதாவின் புதல்வர்; ஏரு , ஓனான், சேலா, பெரேட்சு, செராகு. இவர்களுள் ஏரும் ஓனானும் கானான் நாட்டில் இறந்து போயினர். எட்சரோன், ஆமூல் என்பவர்கள் பெரேட்சுக்குப் பிறந்த புதல்வர்கள்.

13 இசக்காரின் புதல்வர்; தோலா, பூவா, யாசூபு, சிம்ரோன்.

14 செபுலோனின் புதல்வர்; செரேது, ஏலோன், யஸகுலவேல்.

15 இவர்கள் லேயாவின் பிள்ளைகள். இவர் இவர்களையும் தீனா என்ற மகளையும் பதான் அராமில் யாக்கோபுக்குப் பெற்றெடுத்தார். லேயா வழிவந்த அவர் புதல்வர், புதல்வியர் மொத்தம் முப்பத்துமூன்றுபேர்.

16 காத்தின் புதல்வர். சிபியோன், அக்கி, சூனி, எட்சபோன், ஏரீ, அரோதி, அரேலி.

17 ஆசேரின் புதல்வர்; இம்னா, இசுவா, இசுவி, பெரியா. இவர்களுடைய சகோதரி செராகு. பெரியாவின் புதல்வர்; எபேர், மல்கியேல்.


18 இவர்கள் லாபான் தன் மகள் லேயாவுக்குக் கொடுத்த சில்பாவின் பிள்ளைகள். இவள் வழியாக யாக்கோபுக்குப் பிறந்தவர்கள் இந்தப் பதினாறுபேர்.

19 யோசேப்பு, பென்யமின் என்பவர் யாக்கோபின் மனைவி ராகேலின் புதல்வர்.

20 யோசேப்பிற்கு எகிப்து நாட்டில் புதல்வர் பிறந்தனர். ஓன் நகர் அர்ச்சகர் போற்றி பெராவின் மகளான அசினத்து அவர்களை அவருக்குப் பெற்றெடுத்தாள். அவர்கள் மனாசே, எப்ராயீம் ஆவர்.

21 பென்யமினின் புதல்வர்; பேலா, பெக்கேர், அசுபேல், கேரா, நாகமான், ஏகி, ரோசு, முப்பிம், குப்பிம், அருது.

# BIBLE



22 ராகேல் வழிவந்த யாக்கோபின் புதல்வர் மொத்தம் பதினான்கு பேர்.

23 தாணின் மகன், ஊசும்.

24 நப்தலியின் புதல்வர்; யாகுட்சேல், கூனி, ஏட்சேர், சில்லேம்.

25 இவர்கள் லாபான் தன் மகள் ராகேலுக்குக் கொடுத்த பில்காவின் பிள்ளைகள். இவள் வழியாக யாக்கோபுக்குப் பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர்.

26 யாக்கோபின் புதல்வர்களுடைய மனைவியரைத் தவிர அவரது வழிமரபாக எகிப்தில் குடிபுகுந்தோர் மொத்தம் அறுபத்தாறுபேர்.

27 எகிப்து நாட்டில் யோசேப்பிற்குப் பிறந்த புதல்வர்களோ இருவர். ஆகவே, எகிப்தில் குடிபுகுந்த யாக்கோபின் குடும்பத்தார் எல்லோரும் எழுபதுபேர் ஆவர்.

## எகிப்தில் யாக்கோபின் குடும்பம்

28 கோசேன் பகுதியில் யோசேப்பு தம்மை வந்து சந்திக்குமாறு யாக்கோபு யூதாவைத் தமக்குமுன் அனுப்பியிருந்தார். அவர்கள் கோசேன் வந்து சேர்ந்தார்கள்.

29 யோசேப்பு தம் தேரைப் பூட்டிக்கொண்டு தம் தந்தை இஸ்ரயேலைச் சந்திக்கச் சென்றார். யோசேப்பு தம் தந்தையைக் கண்டவுடன் அவரை அரவணைத்து அவர் தோளில் சாய்ந்து கொண்டு வெகுநேரம் அழுதார்.

30 அப்பொழுது, இஸ்ரயேல் யோசேப்பிடம், இப்பொழுது நான் சாகத் தயார். நீ உயிரோடு தான் இருக்கிறாய்! உன் முகத்தைக் கண்ணாரக் கண்டுவிட்டேன்! என்றார்.

31 பின்னர், யோசேப்பு தம் சகோதரரையும் தம் தந்தையின் குடும்பத்தாரையும் நோக்கி, நான் பார்வோனிடம் போய், கானான் நாட்டிலிருந்து என் சகோதரரும், என் தந்தையின் குடும்பத்தாரும் என்னிடம் வந்திருக்கிறார்கள்.

32 அவர்கள் மந்தை மேய்ப்பவர்கள். மந்தைகளை வைத்துப் பேணுவது அவர்கள் தொழில். அவர்கள் தங்கள் ஆடு மாடுகளையும் தங்களுக்குச் சொந்தமான யாவற்றையும் தங்களுடன் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அவருக்குத் தெரிவிப்பேன்.

33 பார்வோன் உங்களை வரவழைத்து, உங்கள் தொழில் என்ன? என்று கேட்கும்பொழுது,

34 நீங்கள் மறுமொழியாக, எங்கள் சிறுவயது முதல் இந்நாள்வரை உம் பணியாளர்களாகிய நாங்கள் எங்கள் மூதாதையரைப்போல் மேய்ப்பவர்களாய் இருக்கிறோம் என்று சொல்லுங்கள். நீங்கள் கோசேன் பகுதியில் குடியிருக்கும்படி அனுமதிக்கப்படுவீர்கள். ஏனெனில், ஆடு மேய்ப்பவர்கள் அனைவரும் எகிப்தியருக்கு அருவருப்பானவர்கள் என்றார்.

# தொடக்கநூல் அதிகாரம் 47 திருவிவிலியம்

1 பின்பு, யோசேப்பு பார்வோனிடம் போய், என் தந்தையும் என் சகோதரர்களும், தங்கள் ஆடு மாடுகளோடும் தங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றோடும் கானான் நாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள். தற்பொழுது அவர்கள் கோசேன் பகுதியில் தங்கியிருக்கிறார்கள் என்று அறிவித்தார்.

2 மேலும், தம் சகோதரரில் ஐந்து பேரைப் பார்வோன் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினார்.

3 பார்வோன் அவர்களை நோக்கி, உங்கள் தொழில் என்ன? என்று கேட்க, அவர்கள் அவனிடம் உம் பணியாளர்களாகிய நாங்கள் எங்கள் மூதாதையரைப்போல் ஆடு மேய்ப்பவர்கள்.

4 கானான் நாட்டில் பஞ்சம் மிகக் கடுமையாய் இருப்பதாலும், உம் பணியாளர்களாகிய எங்கள் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாது போனதாலும், சிறிதுகாலம் இந்நாட்டில் தங்கி இருக்க

# BIBLE



வந்திருக்கிறோம். உம் பணியாளர்களாகிய நாங்கள் கோசேன் பகுதியில் தற்போதைக்குக் குடியிருக்க இசைவு தருமாறு வேண்டுகிறோம் என்றனர்.

5 அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி, உம் தந்தையும் உம் சகோதரர்களும் உம்மிடம்
வந்திருக்கிறார்கள் அல்லவா?

6 எகிப்து நாடு உமக்கு முன்பாக இருக்கிறது. இந்த நாட்டின் சிறந்த பகுதியில் உம் தந்தையும்
சகோதரரும் குடியேறும்படி செய்யும். கோசேன் பகுதியில் அவர்கள் வாழட்டும். அவர்களில்
திறமையுள்ளவர்கள் உண்டென்று நீர் அறிவீரானால், எனக்குச் சொந்தமான மந்தைகளுக்குப்
பொறுப்பான அதிகாரிகளாக அவர்களை ஏற்படுத்தலாம் என்றான்.

7 பின்னர், யோசேப்பு தம் தந்தையை அழைத்துவந்து அரசன் முன் நிறுத்தினார். யாக்கோபு
பார்வோனுக்கு வாழ்த்துமொழி கூறினார்.

8 பார்வோன் யாக்கோபை நோக்கி, உமது வயதென்ன? என்று வினவினான்.

9 அதற்கு யாக்கோபு பார்வோனை நோக்கி, என் வாழ்க்கைப் பயண நாள்கள் நூற்றுமுப்பது
ஆண்டுகள். அவை எண்ணிக்கையில் குறைந்தவை; துன்பத்தில் மிகுந்தவை. ஆனால், அவை
என் மூதாதையரின் நாள்களுக்குக் குறைந்தவையே என்றார்.

10 யாக்கோபு பார்வோனுக்கு வாழ்த்து மொழி கூறியபின் அவனிடம் விடைபெற்றுச் சென்றார்.

11 பார்வோன் கட்டளையிட்டிருந்தபடி, யோசேப்பு தம் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் எகிப்து
நாட்டின் மிகவும் வளமான இராம்சேசு நிலப்பகுதியை உரிமையாகக் கொடுத்து, அங்கு
அவர்களைக் குடியேற்றினார்.

12 மேலும், யோசேப்பு தம் தந்தை, தம் சகோதரர், தம் தந்தையின் குடும்பத்தார் அனைவருக்கும்
அவரவர் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப உணவளித்து அவர்களைப் பேணிக்
காத்துவந்தார். பஞ்சத்தின் கொடுமை

13 பஞ்சம் மிகக் கடுமையாய் இருந்தது. உலகெங்கும் உணவு கிடைக்கவில்லை. குறிப்பாக
எகிப்துநாடும் கானான்நாடும் பஞ்சத்தால் வாடின.

14 எகிப்தியருக்கும் கானானியருக்கும் தானியம் விற்றதால் கிடைத்த பணத்தையெல்லாம் ஒன்று
சேர்த்து யோசேப்பு பார்வோனின் அரண்மனைக்குக் கொண்டுவந்தார்.

15 எகிப்து, கானான் நாடுகளில் பணம் தீர்ந்துபோனபோது, எகிப்தியர் எல்லாரும் யோசேப்பிடம்
வந்து, எங்களுக்கு உணவு தாரும்; பணம் இல்லையென்பதால், உம் முன் நாங்கள் ஏன்
சாகவேண்டும்? என்றனர்.

16 அதற்கு அவர், உங்களிடம் பணம் இல்லையெனில், உங்கள் மந்தைகளைக் கொண்டு
வாருங்கள்; அவற்றுக்குப் பதிலாக உங்களுக்குத் தானியம் தருவேன் என்றார்.

17 எனவே, அவர்கள் போய் மந்தைகளைக் கொண்டு வந்தபோது, யோசேப்பு குதிரைகளையும்
ஆட்டுமந்தைகளையும், மாட்டுமந்தைகளையும் கழுதைகளையும் வாங்கிக் கொண்டு
அவற்றுக்குப் பதிலாக அவர்களுக்கு உணவுப் பொருள்கள் கொடுத்தார். இப்படிக்
கால்நடைகளையெல்லாம் ஈடாகப் பெற்று அவர்களை அந்த ஆண்டு காப்பாற்றினார்.

18 அந்த ஆண்டு முடிந்தபின் அடுத்த ஆண்டில் அவர்கள் மீண்டும் வந்து, அவரை நோக்கி, எம்
தலைவரிடம் மறைப்பதற்கு ஒன்றுமில்லை. பணம் தீர்ந்து போயிற்று. கால்நடைகளும் எம்
தலைவருக்கு சொந்தமாகிவிட்டன. எம் தலைவருக்கு அளிக்க எங்கள் உடலும் நிலமும் தவிர
எங்களிடம் எஞ்சியிருப்பது எதுவுமில்லை.

19 உம் கண்முன் நாங்களும் எங்கள் நிலமும் ஏன் அழிய வேண்டும்? எங்களையும் எங்கள்
நிலத்தையும் உணவுப் பொருளுக்கு ஈடாக எடுத்துக்கொள்ளும். நாங்களும் எங்கள்




நிலங்களும் பார்வோனுக்கு உடைமைகளாய் இருப்போம். நாங்கள் சாகாமல் உயிரோடிருக்கவும் நிலம் பாழடையாமல் இருக்கவும் எங்களுக்குத் தானியம் தாரும் என்றனர்.

20 அவ்வாறே, யோசேப்பு எகிப்திய நிலம் முழுவதையும் பார்வோனுக்கென்று வாங்கிக்கொண்டார். ஏனென்றால், பசியின் கொடுமையால் எகிப்தியர் அனைவரும் தங்கள் வயல்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டனர். அந்த நாடே பார்வோனுக்குச் சொந்தமாயிற்று.

21 எகிப்தின் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லைவரை இருந்த மக்கள் அனைவரையும் யோசேப்பு அடிமை வேலைக்கு உள்ளாக்கினார்.

22 அர்ச்சகர்களின் வயல்களை மட்டும் அவர் வாங்கவில்லை. ஏனென்றால், பார்வோன் அவற்றை அவர்களுக்கு மானியமாகக் கொடுத்திருந்தான். பார்வோன் அவர்களுக்குத் தந்திருந்த மானியத்திலிருந்து அவர்கள் உண்டு வந்ததால், அவர்கள் தங்கள் நிலபுலன்களை விற்கவில்லை.

23 அப்பொழுது யோசேப்பு மக்களை நோக்கி, இன்று உங்களையும், உங்கள் நிலங்களையும் பார்வோனுக்கு உடைமையாக வாங்கிவிட்டேன். இப்போது, உங்களுக்கு விதைத்தானியம் தருகிறேன். அதை நிலத்தில் விதையுங்கள்.

24 விளைச்சலில் ஐந்திலொரு பாகம் பார்வோனுக்குச் செலுத்துங்கள். எஞ்சிய நான்கு பாகம் உங்கள் வயல்களுக்கு விதையாகவும், உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் பிள்ளைகளுக்கும் உணவாகவும் இருக்கட்டும் என்று சொன்னார்.

25 அதற்கு அவர்கள், எங்கள் உயிரைக் காப்பாற்றிவிட்டீர். தலைவராகிய உம் பார்வையில் எங்களுக்குத் தயை கிடைப்பதாக! நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளாகவே இருப்போம் என்றார்கள்.

26 யோசேப்பு எகிப்து நாட்டில் நிலச்சட்டம் ஒன்று கொண்டுவந்தார். அது இன்றுவரை வழக்கில் உள்ளது. ஐந்திலொரு பாகம் பாவோனுக்கு உரியது என்றாயிற்று. அர்ச்சகர்களின் நிலபுலன்கள் மட்டும் பார்வோனின் உடைமையாகவில்லை.

## யாக்கோபின் இறுதி விண்ணப்பம்

27 இஸ்ரயேலர் எகிப்து நாட்டில் கோசேன் பகுதியில் குடியேறி, அதனை உரிமையாக்கிக்கொண்டு, அங்கே மிகவும் பல்கிப் பெருகினர்.


28 யாக்கோபு பதினேழு ஆண்டுகள் எகிப்து நாட்டில் இருந்தார். அவரது வாழ்நாள் மொத்தம் நூற்றுநாற்பத்தேழு ஆண்டுகள்.

29 அவர் தாம் இறக்கும் நாள் நெருங்கி வருவதைக் கண்டு, தம் மகன் யோசேப்பை வரவழைத்து, அவரை நோக்கி, உன் பார்வையில் எனக்குத் தயை கிடைக்குமானால், உன் கையை என் தொடையின் கீழ் வைத்து, எனக்குக் கனிவும் பற்றும் காட்டுவதாக வாக்களி. என்னை எகிப்து நாட்டில் அடக்கம் செய்யாதே.

30 நான் என் மூதாதையரோடு துஞ்சியபின், என்னை எகிப்திலிருந்து எடுத்துக் கொண்டு சென்று, என் மூதாதையரின் கல்லறையில் என்னையும் அடக்கம் செய் என்றார். அதற்கு யோசேப்பு, நீர் சொன்னபடியே செய்வேன் என்றார்.

31 அவரோ, எனக்கு ஆணையிட்டுக் கொடு என்றார். யோசேப்பும் ஆணையிட்டுக் கொடுத்தார். அப்பொழுது இஸ்ரயேல் படுக்கையின் தலைப்பக்கம் திரும்பித் தொழுதார்.

தொடரும்.....




3:49 وَرَسُوْلًا اِلٰى بَنِىْٓ اِسْرَآءِيْلَ اَنِّىْ قَدْ جِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ اَنِّىْٓ اَخْلُقُ لَـكُمْ مِّنَ الطِّيْنِ كَهَیْـــٴَـةِ
الطَّيْرِ فَاَنْفُخُ فِيْهِ فَيَكُوْنُ طَيْرًا بِاِذْنِ اللّٰهِ وَاُبْرِئُ الْاَكْمَهَ وَالْاَبْرَصَ وَاُحْىِ الْمَوْتٰى بِاِذْنِ اللّٰهِ وَاُنَبِّئُكُمْ بِمَا تَاْكُلُوْنَ
وَمَا تَدَّخِرُوْنَ فِىْ بُيُوْتِكُمْ اِنَّ فِىْ ذٰلِكَ لَاٰيَةً لَّـكُمْ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ


3:49. இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான்; இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்:) “நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்; நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில் ஊதுவேன்; அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும். பிறவிக் குருடர்களையும், வெண் குஷ்டரோகிகளையும் குணப்படுத்துவேன்; அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் உயிர்ப்பிப்பேன்; நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைப்பவற்றையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் மு∴மின்கள் (நம்பிக்கையாளர்) ஆக இருந்தால் நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது” (என்று கூறினார்).

3:50 وَمُصَدِّقًا لِّمَا بَيْنَ يَدَىَّ مِنَ التَّوْرٰٮةِ وَلِاُحِلَّ لَـكُمْ بَعْضَ الَّذِىْ حُرِّمَ عَلَيْكُمْ وَجِئْتُكُمْ بِاٰيَةٍ مِّنْ رَّبِّكُمْ فَاتَّقُوا
اللّٰهَ وَاَطِيْعُوْنِ

3:50. “எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்பிக்கவும், உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன்; ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; என்னைப் பின் பற்றுங்கள்.”

3:51 اِنَّ اللّٰهَ رَبِّىْ وَرَبُّكُمْ فَاعْبُدُوْهُ هٰذَا صِرَاطٌ مُّسْتَقِيْمٌ

3:51. “நிச்சயமாக அல்லாஹ்வே என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனும் ஆவான்; ஆகவே அவனையே வணங்குங்கள் இதுவே (ஸிராத்துல் முஸ்தகீம் என்னும்) நேரான வழியாகும்.”



ۚ اٰمَنَّا بِاللّٰهِ ۚ قَالَ الْحَـوَارِيُّوْنَ نَحْنُ اَنْصَارُ اللّٰهِ فَلَمَّاۤ اَحَسَّ عِيْسٰى مِنْهُمُ الْكُفْرَ قَالَ مَنْ اَنْصَارِىْۤ اِلَى اللّٰهِ 3:52
وَاشْهَدْ بِاَنَّا مُسْلِمُوْنَ

3:52. அவர்களில் குஃப்ரு இருப்பதை (அதாவது அவர்களில் ஒரு சாரார் தம்மை நிராகரிப்பதை) ஈஸா உணர்ந்த போது: “அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவி செய்பவர்கள் யார்?” என்று அவர் கேட்டார்; (அதற்கு அவருடைய சிஷ்யர்களான) ஹவாரிய்யூன்: “நாங்கள் அல்லாஹ்வுக்காக (உங்கள்) உதவியாளர்களாக இருக்கிறோம், நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளோம்; திடமாக நாங்கள் (அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக இருக்கின்றோம், என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்” எனக் கூறினர்.

3:53 رَبَّنَاۤ اٰمَنَّا بِمَاۤ اَنْزَلْتَ وَاتَّبَعْنَا الرَّسُوْلَ فَاكْتُبْنَا مَعَ الشّٰهِدِيْنَ


3:53. “எங்கள் இறைவனே! நீ அருளிய (வேதத்)தை நாங்கள் நம்புகிறோம், (உன்னுடைய) இத்தூதரை நாங்கள் பின்பற்றுகிறோம்; எனவே எங்களை (சத்தியத்திற்கு) சாட்சி சொல்வோருடன் சேர்த்து எழுதுவாயாக!” (என்று சிஷ்யர்களான ஹவாரிய்யூன் பிரார்த்தித்தனர்.)

3:54 وَمَكَرُوْا وَمَكَرَ اللّٰهُ ؕ وَاللّٰهُ خَيْرُ الْمَاكِرِيْنَ

3:54. (ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள்; அல்லாஹ்வும் சதி செய்தான்; தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான்.

3:55 وَرَافِعُكَ اِلَىَّ وَمُطَهِّرُكَ مِنَ الَّذِيْنَ كَفَرُوْا وَجَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ اِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسٰۤى اِنِّىْ مُتَوَفِّيْكَ
ثُمَّ اِلَىَّ مَرْجِعُكُمْ فَاَحْكُمُ بَيْنَكُمْ فِيْمَا كُنْتُمْ فِيْهِ تَخْتَلِفُوْنَ ۚ الَّذِيْنَ كَفَرُوْۤا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ

3:55. “ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்; நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன்; மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன்; பின்னர் உங்களுடைய திரும்புதல்



என்னிடமே இருக்கிறது; (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்” என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நினைவு கூர்வீராக)!

3:56 فِي الدُّ شَدِيْدًا عَذَابًا فَاُعَذِّبُهُمْ كَفَرُوْا الَّذِيْنَ فَاَمَّا وَالْاٰخِرَةِ نْيَا _ نّٰصِرِيْنَ مِّنْ لَهُمْ وَمَا

3:56. எனவே, நிராகரிப்போரை இவ்வுலகிலும், மறுமையிலும் கடினமான வேதனையைக்கொண்டு வேதனை செய்வேன்; அவர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள்.

3:57 وَعَمِلُوا اٰمَنُوْا الَّذِيْنَ وَاَمَّا اُجُوْرَهُمْ فَيُوَفِّيْهِمْ الصّٰلِحٰتِ الظّٰلِمِيْنَ يُحِبُّ لَا وَاللّٰهُ

3:57. ஆனால், எவர் ஈமான் கொண்டு நற்கருமங்களும் செய்கிறார்களோ, அவர்களுக்குரிய நற்கூலிகளை (அல்லாஹ்) முழுமையாகக் கொடுப்பான்; அல்லாஹ் அக்கிரமம் செய்வோரை நேசிக்கமாட்டான்.

3:58 ذٰ الْحَكِيْمِ وَالذِّكْرِ الْاٰيٰتِ مِنَ عَلَيْكَ نَتْلُوْهُ لِكَ

3:58. (நபியே!) நாம் உம் மீது ஓதிக்காட்டிய இவை (நற்சான்றுகளைக் கொண்ட) இறை வசனங்களாகவும்; ஞானம் நிரம்பிய நற்செய்தியாகவும் இருக்கின்றன.

3:59 اٰدَمَ كَمَثَلِ اللّٰهِ عِنْدَ عِيْسٰى مَثَلَ اِنَّ فَيَكُوْنُ كُنْ لَهُ قَالَ ثُمَّ تُرَابٍ مِنْ خَلَقَهُ


3:59. அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப் பின் “குன்” (ஆகுக) எனக் கூறினான்; அவர் (மனிதர்) ஆகிவிட்டார்.

3:60 فَ رَّبِّكَ مِنْ اَلْحَقُّ الْمُمْتَرِيْنَ مِّنَ تَكُنْ لَا

3:60. (நபியே! ஈஸாவைப் பற்றி) உம் இறைவனிடமிருந்து வந்ததே உண்மையாகும்; எனவே (இதைக் குறித்து) ஐயப்படுவோரில் நீரும் ஒருவராகிடாதீர்.

3:61 نَدْعُ تَعَالَوْا فَقُلْ الْعِلْمِ مِنَ جَآءَكَ مَا بَعْدِ مِنْ فِيْهِ حَآجَّكَ فَمَنْ وَاَنْفُسَنَا وَنِسَآءَكُمْ وَنِسَآءَنَا وَاَبْنَآءَكُمْ اَبْنَآءَنَا
وَاَنْفُسَكُمْ ثُمَّ نَبْتَهِلْ فَنَجْعَلْ لَّعْنَتَ اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ

3:61. (நபியே!) இதுபற்றிய முழு விபரமும் உமக்கு வந்து சேர்ந்த பின்னரும் எவரேனும் ஒருவர் உம்மிடம் இதைக் குறித்து தர்க்கம் செய்தால்; “வாருங்கள்! எங்கள் புதல்வர்களையும், உங்கள் புதல்வர்களையும்; எங்கள் பெண்களையும், உங்கள் பெண்களையும்; எங்களையும்




உங்களையும் அழைத்து (ஒன்று திரட்டி வைத்துக் கொண்டு) ''பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்'' என்று நாம் பிரார்த்திப்போம்!'' என நீர் கூறும்.

3:62 وَاِنَّ اللّٰهَ لَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ وَمَا مِنْ اِلٰهٍ اِلَّا اللّٰهُ اِنَّ هٰذَا لَهُوَ الْقَصَصُ الْحَقُّ

3:62. நிச்சயமாக இதுதான் உண்மையான வரலாறு; அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை; நிச்சயமாக அல்லாஹ் - அவன் யாவரையும் மிகைத்தோன்; மிக்க ஞானமுடையோன்.

3:63 فَاِنْ تَوَلَّوْا فَاِنَّ اللّٰهَ عَلِيْمٌ بِالْمُفْسِدِيْنَ

3:63. அவர்கள் புறக்கணித்தால் - திடமாக அல்லாஹ் (இவ்வாறு) குழப்பம் செய்வோரை நன்கறிந்தவனாகவே இருக்கின்றான்.


3:64 وَّلَا يَتَّخِذَ بِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَاۤءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْـًٔا قُلْ يٰۤاَهْلَ الْكِ
فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ بَعْضُنَا بَعْضًا اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ

3:64. (நபியே! அவர்களிடம்) "வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்; (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம்'' எனக் கூறும்; (மு.ுமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால்: "நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!'' என்று நீங்கள் கூறிவிடுங்கள்.

3:65 فِىْۤ اِبْرٰهِيْمَ وَمَاۤ اُنْزِلَتِ التَّوْرٰىةُ وَالْاِنْجِيْلُ اِلَّا مِنْۢ بَعْدِهٖ اَفَلَا تَعْقِلُوْنَ يٰۤاَهْلَ الْكِتٰبِ لِمَ تُحَاۤجُّوْنَ

3:65. வேதத்தையுடையோரே! இப்ராஹீமைப் பற்றி (அவர் யூதரா, கிறிஸ்தவரா என்று வீணாக) ஏன் தர்க்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? அவருக்குப் பின்னரேயன்றி தவ்ராத்தும், இன்ஜீலும் இறக்கப்படவில்லையே; (இதைக்கூட) நீங்கள் விளங்கிக் கொள்ளவில்லையா?

3:66 تَعْلَمُوْنَ وَاللّٰهُ يَعْلَمُ وَاَنْتُمْ لَا هٰۤاَنْتُمْ هٰۤؤُلَاۤءِ حَاجَجْتُمْ فِيْمَا لَكُمْ بِهٖ عِلْمٌ فَلِمَ تُحَاۤجُّوْنَ فِيْمَا لَيْسَ لَكُمْ بِهٖ عِلْمٌ



3:66. உங்களுக்குச் சிறிது ஞானம் இருந்த விஷயங்களில் (இதுவரை) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தீர்கள்; (அப்படியிருக்க) உங்களுக்குச் சிறிதுகூட ஞானம் இல்லாத விஷயங்களில் ஏன் விவாதம் செய்ய முற்படுகிறீர்கள்? அல்லாஹ்தான் அறிவான்; நீங்கள் அறியமாட்டீர்கள்.

3:67 ۚ وَمَا كَانَ مِنَ الْمُشْرِكِيْنَ مَا كَانَ اِبْرٰهِيْمُ يَهُوْدِيًّا وَّلَا نَصْرَانِيًّا وَّ لٰكِنْ كَانَ حَنِيْفًا مُّسْلِمًا

3:67. இப்ராஹீம் யூதராகவோ, அல்லது கிறிஸ்தவராகவோ இருக்கவில்லை; ஆனால் அவர் (அல்லாஹ்விடம்) முற்றிலும் (சரணடைந்த) நேர்மையான முஸ்லிமாக இருந்தார்; அவர் முஷ்ரிக்குகளில் (இணைவைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை.

3:68 وَاللّٰهُ وَلِىُّ الْمُؤْمِنِيْنَ اِنَّ اَوْلَى النَّاسِ بِاِبْرٰهِيْمَ لَـلَّذِيْنَ اتَّبَعُوْهُ وَهٰذَا النَّبِىُّ وَالَّذِيْنَ اٰمَنُوْا

3:68. நிச்சயமாக மனிதர்களில் இப்ராஹீமுக்கு மிகவும் நெருங்கியவர்கள், அவரைப் பின்பற்றியோரும், இந்த நபியும், (அல்லாஹ்வின் மீதும், இந்த நபியின் மீதும்) ஈமான் கொண்டோருமே ஆவார்; மேலும் அல்லாஹ் மு..மின்களின் பாதுகாவலனாக இருக்கின்றான்.

3:69 لِ الْكِتٰبِ لَوْ يُضِلُّوْنَكُمْ وَمَا يُضِلُّوْنَ اِلَّاۤ اَنْفُسَهُمْ وَمَا يَشْعُرُوْنَ وَدَّتْ طَّآٮِٕفَةٌ مِّنْ اَهْ

3:69. வேதத்தையுடையோரில் ஒரு சாரார் உங்களை வழி கெடுக்க விரும்புகிறார்கள்; ஆனால் அவர்கள் தங்களையே அன்றி வழி கெடுக்க முடியாது; எனினும், (இதை) அவர்கள் உணர்கிறார்களில்லை.


3:70 يٰۤـاَهْلَ الْكِتٰبِ لِمَ تَكْفُرُوْنَ بِاٰيٰتِ اللّٰهِ وَاَنْـتُمْ تَشْهَدُوْنَ

3:70. வேதத்தையுடையவர்களே! நீங்கள் தெரிந்து கொண்டே அல்லாஹ்வின் வசனங்களை ஏன் நிராகரிக்கின்றீர்கள்?

3:71 بِالْبَاطِلِ وَتَكْتُمُوْنَ الْحَـقَّ وَاَنْـتُمْ تَعْلَمُوْنَ يٰۤـاَهْلَ الْكِتٰبِ لِمَ تَلْبِسُوْنَ الْحَـقَّ

3:71. வேதத்தையுடையோரே! சத்தியத்தை அசத்தியத்துடன் ஏன் நீங்கள் கலக்குகிறீர்கள்? இன்னும் நீங்கள் அறிந்து கொண்டே ஏன் உண்மையை மறைக்கிறீர்கள்?

3:72 مِنُوْا بِالَّذِىْۤ اُنْزِلَ عَلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَجْهَ النَّهَارِ وَاكْفُرُوْۤا اٰخِرَهٗ لَعَلَّهُمْ وَقَالَتْ طَّآٮِٕفَةٌ مِّنْ اَهْلِ الْكِتٰبِ اٰ
ۚ يَرْجِعُوْنَ




3:72. வேதத்தையுடையோரில் ஒரு சாரார் (தம் இனத்தாரிடம்): “ஈமான் கொண்டோர் மீது இறக்கப்பட்ட (வேதத்)தைக் காலையில் நம்பி, மாலையில் நிராகரித்து விடுங்கள்; இதனால் (ஈமான் கொண்டுள்ள) அவர்களும் ஒரு வேளை (அதை விட்டுத்) திரும்பி விடக்கூடும்” என்று கூறுகின்றனர்.

3:73 يتُمْ أَوْ يُحَآجُّوكُمْ عِندَ ب وَلَا تُؤْمِنُوٓا۟ إِلَّا لِمَن تَبِعَ دِينَكُمْ قُلْ إِنَّ ٱلْهُدَىٰ هُدَى ٱللَّهِ أَن يُؤْتَىٰٓ أَحَدٌ مِّثْلَ مَآ أَوْ
وَٱللَّهُ وَٰسِعٌ عَلِيمٌ قُلْ إِنَّ ٱلْفَضْلَ بِيَدِ ٱللَّهِ يُؤْتِيهِ مَن يَشَآءُ رَبِّكُمْ


3:73. “உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றுவோரைத் தவிர (வேறு எவரையும்) நம்பாதீர்கள்” (என்றும் கூறுகின்றனர். நபியே!) நீர் கூறும்: நிச்சயமாக நேர்வழியென்பது அல்லாஹ்வின் வழியே ஆகும்; உங்களுக்கு (வேதம்) கொடுக்கப்பட்டதுபோல் இன்னொருவருக்கும் கொடுக்கப்படுவதா அல்லது அவர்கள் உங்கள் இறைவன் முன் உங்களை மிகைத்து விடுவதா?” (என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.) நிச்சயமாக அருட்கொடையெல்லாம் அல்லாஹ்வின் கையிலேயே உள்ளது; அதை அவன் நாடியோருக்கு வழங்குகின்றான்; அல்லாஹ் விசாலமான (கொடையளிப்பவன்; யாவற்றையும்) நன்கறிபவன் என்று கூறுவீராக.

தொடரும்.....



வாழ்க்கையே ஒரு விளையாட்டு
நாமெல்லாம் அதில் விளையாட்டு வீரர்கள்...
Life is a Game
and we are all Players in it...

பேரறிஞர்
Ld Dr. மபாலராஜ்
சர்வதேச தலைவர் & நிறுவனர்
சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்
LORDS CLUBS INTERNATIONAL






असंयतात्मना योगो दुष्प्राप इति मे मतिः ।
वश्यात्मना तु यतता शक्योऽवाप्तुमुपायतः ॥


தன்னைக் கட்டாதவன் யோக மெய்துதல் அரிதென்று நான் கருதுகிறேன். தன்னைக் கட்டியவன் முயற்சியாலும் உபாயத்தாலும் அதனை எய்த வல்லான். 36

अर्जुन उवाच—

अयतिः श्रद्धयोपेतो योगाच्चलितमानसः ।
अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति ॥

அர்ஜுனன் சொல்லுகிறான்:—

நம்பிக்கை யுடையோ னெனினும், தன்னைக் கட்டாமையால் யோகத்தினின்றும் மனம் வழுவியவன் யோகத்தில் தோற்றுப்போய், அப்பால் என்ன கதி யடைகிறான், கண்ணா? 37







कच्चिन्नोभयविभ्रष्ट-
छिन्नाभ्रमिव नश्यति ।
अप्रतिष्ठो महाबाहो
विमूढो ब्रह्मणः पथि ॥ ३८ ॥

ஒரு வேளை அவன் இரண்டுங் கெட்டவனாய், உடைந்த மேகம்போல் அழிகிறானோ? பெருந் தோளாய், உறுதி யற்றவனாய், ப்ரம்ம நெறியிலே குழப்பமெய்திய மூடன் யாதாகிறான்? 38

एतन्मे संशयं कृष्ण
छेत्तुमर्हस्यशेषतः ।
त्वदन्यः संशयस्यास्य
छेत्ता न ह्युपपद्यते ॥ ३९ ॥

கண்ணா; எனக்குள்ள இந்த ஐயத்தை நீ அறுத்துவிடுக. நின்னை யன்றி இந்த ஐயத்தை யறுப்போர் வேறெவருமிலர். 39






श्रीभगवानुवाच—


पार्थ नैवेह नामुत्र
विनाशस्तस्य विद्यते ।
न हि कल्याणकृत् कश्चिद्-
दुर्गतिं तात गच्छति ॥ ४० ॥

ஸ்ரீ பகவான் சொல்லுகிறன்—

பார்த்தா, அவனுக்கு இவ்வுலகத்திலும், மேலுலகத்திலும் அழிவில்லை; மகனே, நன்மை செய்வோன் எவனும் கெட்டகதி யடையமாட்டான்.

प्राप्य पुण्यकृतांल्लोका-
नुषित्वा शाश्वतीः समाः ।
शुचीनां श्रीमतां गेहे
योगभ्रष्टोऽभिजायते ॥ ४१ ॥

யோகத்தில் தவறியவன், புண்ணியம் செய்வோரின் உலகங்களை யெய்தி, அங்கு கணக்கில்லாத வருஷங்கள் வாழ்ந்து, தூய்மை யுடைய செல்வர்களின் வீட்டில் பிறக்கிறான். 41






**अथवा योगिनामेव कुले भवति धीमताम् ।**
**एतद्धि दुर्लभतरं लोके जन्म यदीदृशम् ॥ ४२ ॥**


அல்லது, புத்திமான்களாகிய யோகிகளின்
குலத்திலேயே பிறக்கிறான். இவ்வுலகில் இது
போன்ற பிறவி யெய்துதல் மிகவும் அரிது. 42

**तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदेहिकम् ।**
**यतते च ततो भूयः संसिद्धौ कुरुनन्दन ॥ ४३ ॥**

அங்கே அவன் பூர்வ சரீரத்துக் குரிய புத்
தியைப் பெறுகிறான். குருநந்தனா, அப்பால்
அவன் மறுபடியும் வெற்றிக்கு முயற்சி செய்
கிறான். 43

**पूर्वाभ्यासेन तेनैव ह्रियते ह्यवशोऽपि सः ।**
**जिज्ञासुरपि योगस्य शब्दब्रह्मातिवर्तते ॥ ४४ ॥**

பண்டைப் பழக்கத்தால் அவன் தன் வச
மின்றியும் இழுக்கப்படுகிறான். யோகத்தை
அறிய வேண்டுமென்ற விருப்பத்தாலேயே ஒரு
வன் ஒலி யுலகத்தைக் கடந்து செல்லுகிறான். 44







प्रयत्नाद्यतमानस्तु
योगी संशुद्धकिल्बिषः ।
अनेकजन्मसंसिद्ध-
स्ततो याति परां गतिम् ॥ ४५ ॥

பாவம் நீங்கியவனும், ஊன்றி முயல்வானேயாயின், யோகி பல பிறவிகளின் வெற்றிப்பயனாகிய பரகதியை அப்போதடைகிறான். 45

तपस्विभ्योऽधिको योगी
ज्ञानिभ्योऽपि मतोऽधिकः ।
कर्मिभ्यश्चाधिको योगी
तस्माद्योगी भवार्जुन ॥ ४६ ॥

தவஞ் செய்வோரைக் காட்டிலும் யோகி சிறந்தோன்; ஞானிகளிலும் அவன் சிறந்தோனாகக் கருதப்படுகிறான்; கர்மிகளிலும் அவன் சிறந்தோன்; ஆதலால், அர்ஜுனா, யோகியாகுக. 46






योगिनामपि सर्वेषां मद्गतेनान्तरात्मना ।
श्रद्धावान् भजते यो मां स मे युक्ततमो मतः ॥

மற்றந்த யோகிகளெல்லாரிலும், எவனொருவன் அந்தராத்மாவில் என்னைப் புகுத்தி என்னை நம்பிக்கையுடன் போற்றுகிறானோ, அவன் மிக மேலான யோகி யென்பது என்னுடைய கொள்கை. 47

इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु ब्रह्मविद्यायां
योगशास्त्रे श्रीकृष्णार्जुनसंवादे
अध्यात्मयोगो नाम
षष्ठोऽध्यायः ।

இங்ஙனம் உபநிஷத்தும் பிரம்ம வித்தையும் யோக சாஸ்திரமும் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன ஸம்பாஷணையுமாகிய ஸ்ரீமத் பகவத் கீதையில் "அத்யாத்மயோகம்" என்ற ஆறாம் அத்யாயம் முற்றிற்று.

தொடரும்.....




In 1820, in arguably the most pivotal contribution to modern power systems, Michael Faraday and Joseph Henry invented a primitive electric motor, and in 1831, documented that an electric current can be produced in a wire moving near a magnet—demonstrating the principle of the generator.

**The Evolution of Power Business Models**

The birth of the modern electric utility began when Thomas Edison invented the practical lightbulb in 1878, and, to spur demand for the novel invention, developed an entire power system that generated and distributed electricity. While the concept caught on in several cities in the early years, owing to exorbitant costs, power companies rarely owned several power plants.

Samuel Insull, who began his role as president at Chicago Edison in 1892, is credited with first exploiting load factor, not only finding power customers for off-peak times, but leveraging technology including larger generation systems and alternating current to produce and transmit power more cheaply. Crucially, he is also said to have pioneered consolidation; he acquired

20 small utilities by 1907 to give birth to a natural monopoly—Commonwealth Edison.

The model was widely emulated, and for decades, scale economies associated with large centralized generation technologies encouraged vertical integration to drive down power costs, encourage universal access, and provide reliability. To enforce the responsibilities and rights of these investor-owned utilities (IOUs) and their customers, however, this approach also spurred more government oversight and regulation. It also gave rise to both municipal ownership, and later, as a New Deal measure, public power to enable rural electrification.

Business models began to shift more distinctively starting in the late 1970s, as environmental policy, the oil shocks, and initiatives to open the airline and trucking industries to competition disrupted the status quo. The evolution that happened in the last 40 years, which has left an enduring legacy, is often categorized into two big buckets: the introduction of competition, and reforming the way monopoly utilities operate. A key step to initiating reforms in the U.S. stemmed from passage of the Public Utilities Regulatory Policies Act (PURPA) of 1978, which essentially created opportunities for smaller generators to get into the game.

The final, but just as significant, historical upheaval was energy deregulation. In the 1990s, holding competition as the most effective driver of low power costs, several states also moved to end monopoly protections for retail sales—though after California's high-profile energy crisis in 2000 and 2001, many scaled back their plans and even re-regulated their retail sectors. Deregulation had the important role of giving rise to new retail companies, whose business models were exclusively focused on delivery of power to the customer.

If and how these models thrive, however, is questionable. Decarbonization, decentralization, and digitalization—as well as the recent impact from the COVID-19 pandemic—have slackened or prompted a decline in power demand. At the same time, traditional regulatory approaches, which have been predicated on growth, must grapple with an increasingly complex industry landscape. The past decades have ushered in two-way flows of electricity, more stringent environmental policies, and state goals. Regulators are challenged with ensuring power systems are operating efficiently, complying with environmental goals, remain reliable, and address equity issues for low-income customers


சர்வதேச மனிதக்கடவுள்கள் சங்கங்கள்

LORDS CLUBS INTERNATIONAL

25th Years SERVICE

பேரறிஞர் Ld Dr. மபால்ராஜ்

Founder | International President

LORDS CLUBS INTERNATIONAL

International Social Services

Govt. Reg. No. : 1359 / 2013

+91 9840559673 | +91 9790855633

www.lordsclubs.com

World Number 1 SERVICE



இரத்த தானம் செய்வோம்! உயிர் காப்போம்!!

மரம் நடுவோம்! மழை பெறுவோம்!! நிலம் காப்போம்!!!

அன்ன தானம் செய்வோம்! அருள் பெறுவோம்!!

கண் தானம் செய்வோம்! ஒளி கொடுப்போம்!!

கல்வி தானம் செய்வோம்! கல்வி கண் திறப்போம்!!

இந்திய பொருளாதாரம் உயர்த்திடுவோம்! இந்தியர்களை காத்திடுவோம்!!

# History of the telephone



1672: Robert Hooke created the first acoustic telephone in 1672. Very much like the two-soup-can toys you made as a child, Hooke found that sound could be sent over a wire or string from a mouthpiece on one side to an earpiece on the other.

1838: Samuel B. Morse discovered that you could transmit messages by pressing down or releasing a button in intervals to transmit a pattern of sounds. This was known as Morse code.

1858: Cyrus Field sought to lay the first transatlantic telephone cable, connecting England and the U.S. by telegraph. This project was met with setbacks before it was completed in August 1858.

1867: Dots and dashes were flashed with signal lamps for the first time at sea in 1867. The idea came from British admiral Phillip Colomb, who used the signal lamp design of Arthur C.W. Aldis and devised a code to communicate with other ships. The code was much like Morse code; eventually, Morse code won out.

1876: Since coming to America as a teacher of the deaf, Alexander Graham Bell had sought a way to transmit speech electronically. He invented the telephone in March 1876.

1880: Bell set up a lab and worked to improve his invention. The result? The photophone, which was capable of sending sound on a beam of light. Bell made what was essentially history's first wireless call!

1915: Bell makes the first coast-to-coast phone call in January 1915. This was the first long-distance call from a land line. Bell's call helped make long-distance calling a reality.

1927: The first telephone service from the U.S. to the U.K. was set up in January 1927. The first phones were radio phones, but there were fading and interference issues. Three minutes of time on these phones cost nearly $10.

1930: AT&T created a two-way videotelephone called the Iconophone. The Iconophone let people see, hear, and reply to each other in real time. The idea didn't see much commercial success.

1934: The first radio telephone calls are placed from the U.S. to Japan, facilitating communication across the Pacific Ocean.

1936: The first public videophone network is set up in Nazi Germany at a trade fair. Use of the network was limited to "Aryans only."

1946: In June 1946, a telephone call was made from an automobile-based phone for the first time. It wasn't a very large mobile network, due in part to the high cost of installation.

1947: In 1946, an electronic gizmo known as a transistor was created by John Bardeen, Walter Brattain, and William Shockley. This would replace large vacuum tube systems and allow computers to be merged with electronics, the beginnings of smartphone development.

1956: The first transatlantic telephone cable makes calls much more affordable than the radio telephone system it helped to replace.

1962: The Communications Satellite Act is passed, allowing the use of satellites in telecommunications.

1964: Charles Kao and George Hockham publish a paper proving that fiber-optic communication was possible.

1965: Trials begin of the first picturephone service. In July, Union Carbide Corporation started testing on the first picturephone network.

1973: Martin Cooper places the first cellular mobile call to Joel Engle, a rival at Bell Labs. The first cell phone took a year to recharge, and the maximum talk time was only 30 minutes.

1977: The FCC officially launches the first primary cellular test network. It only opened in few select areas, like Chicago, Washington, D.C., and Baltimore.

1979: Ship-to-shore communication takes a leap forward as the International Maritime Satellite Organization (INMARSAT) is established. Its aim was to provide reliable communication to marine vessels for increased safety.

1981: The first automated commercial cellular network, called 1G Generation, is launched in Japan. At the same time, the Nordic Mobile Telephone system is established in Denmark, Finland, Norway, and Sweden.

1983: Motorola releases the DynaTac mobile telephone in 1983. Nicknamed "The Brick," it had one hour of talk time and eight hours of standby.

1989: Only a few years after "The Brick" is released, Motorola develops the lightest cellular device on the market. The phone is called the MicroTAC and weighs in at only 12 ounces.

1992: The world's first commercial text message was sent out in 1992. It was written and sent by the employees of a company known as Logica CMG.

1993: The first smartphones came out for the public to buy. IBM created one called Simon, which had a touch screen and could send and receive faxes.

1995: Sprint opens the first personal communications service. It was the first cellular network designed for private use for individuals who own cellular phones.

1998: A company called Iridium puts a canopy of 64 satellites is into place. They also made the first hand-held satellite phones, replacing "bag" phones with ones that were much less cumbersome. This move would lead to development of the modern smartphone.

2003: Technology is developed to transmit phone calls over Internet protocols. Long-distance charges could be avoided through the use of established computer networks.

2008: Both the iTunes Store and the Android market open up for smartphone users in 2008. This heralds the beginning of a huge surge in the popularity of apps.

2010: Smartphones continue to develop in 2010. The first 4G handset is released this year, bringing data onto consumers' phones at blazing-fast speeds.

# உறுப்பினர்கள் தேவை

# LORDS
## CLUBS INTERNATIONAL

Govt. Registration Number : 1359 / 2013

**International Social Services**



| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்த தானம் செய்வோம்! உயிர் காப்போம்!! | மரம் நடுவோம்! மழை பெறுவோம்!! நிலம் காப்போம்!!! | அன்ன தானம் செய்வோம்! அருள் பெறுவோம்!! | கண் தானம் செய்வோம்! ஒளி கொடுப்போம்!! | கல்வி தானம் செய்வோம்! கல்விக் கண் திறப்போம்!! | இந்தியப் பொருளாதாரம் உயர்த்திடுவோம்! இந்தியர்களைக் காத்திடுவோம்!! |

## சமூக சேவை செய்ய ஆர்வமுள்ள ஆண் / பெண் சமூக சேவகர்கள், உலகெங்கும் ஊர் நகர் வாரியாகத் தேவை



**Call Us : 9840559673, 9790855633**

**Web : www.lordsclubs.com**